අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, පෙරහුරු පරීක්ෂණය - 2025 (2026)

**கல்வி, உயர் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சு**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, முன்னோடிப் பரீட்சை - 2025 (2026)**

**ව්‍යවසායකත්ව අධ්‍යාපනය I, II**
**முயற்சியாண்மைக்கல்வி I, II**
Entreprenurship Studies **I, II**

63 | T | I, II

**පැය තුනයි**
***மூன்று மணித்தியாலம்***
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## முயற்சியாண்மைக்கல்வி I

**அறிவுறுத்தல்கள் :**
* **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

1. முயற்சியாண்மை என்பதனை மிகவும் தெளிவாகக் காட்டும் கூற்றானது,
   (1) தனிநபர்களின் நேர்மறையான அணுகுமுறை, திறன்கள் மற்றும் திறன்களின் கலவையாகும்.
   (2) ஒரு தனிநபரால் மட்டுமே பெறப்படும் மதிப்புமிக்க மனநிலையாகும்.
   (3) படைப்பாற்றல் மூலம் புதுமைகளை உருவாக்கும் மனித சிந்தனையுடன் தொடர்புடைய செயன் முறையாகும்.
   (4) மாற்றத்தை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதிப்புமிக்க மனநிலையாகும்.

2. உற்பத்திக் காரணிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) மண், உழைப்பு, மூலதனம், இயந்திரங்கள்
   (2) நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சியாண்மை
   (3) உழைப்பு, மூலப்பொருள், காணி, முயற்சியாண்மை
   (4) நிலம், உழைப்பு, இயந்திரம், காடுகள்

3. முயற்சியாளர் என்பவர்,
   (1) புதுமை புனைபவர் (2) பாரம்பரியமாக வேலை செய்பவர்
   (3) எந்த ஆபத்தையும் எதிர்கொள்பவர் (4) வணிக செயற்பாடுகளில் மட்டும் ஈடுபடுபவர்

4. புத்தாக்கத்திற்குப் **பாதகமாக** அமையும் காரணியானது,
   (1) தர்க்க ரீதியாக இருப்பது (2) தவறுகள் மற்றும் விமர்சனங்களுக்கு அஞ்சாமை
   (3) விதிகள், மரபுகளுக்குக் கீழ்படிதல் (4) சட்ட திட்டங்களை மதித்து நடப்பது

5. குரக்கன் மாவைப் பயன்படுத்தி பேக்கரிப் பொருட்களை உற்பத்தி செய்வதானது,
   (1) புதிய கண்டுபிடிப்பாகும் (2) ஒரு நீடிப்பாகும்
   (3) ஒரு பின்பற்றல் தன்மையாகும் (4) ஒரு கூட்டாகும்

6. சுதந்திரம் என்பது,
   (1) இலக்கினை அடைவதற்காக யதார்த்தமாகச் செயற்படுவது
   (2) ஒருவரின் சொந்த விருப்பங்களுக்கமைய வேலை செய்வது
   (3) மாற்றங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க முடிவது
   (4) தோல்வி மற்றும் பின்னடைவுகளை எதிர்கொள்ளும் திறன்

7. **“நான் தோல்வியடையமாட்டேன். எனினும் மின்குமிழ் செயலிழக்கக்கூடிய 999 சந்தர்ப்பங்களை இனங்கண்டு கொண்டேன்”.** தோமஸ் அல்வா எடிசனின் இந்த கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள முயற்சியாண்மைப் பண்பானது,
   (1) நெகிழ்வுத் தன்மை
   (2) ஒருவரின் சொந்த வெற்றி அவரால் தீர்மானிக்கப்படுகின்றது என்ற நம்பிக்கை
   (3) நம்பிக்கை
   (4) கடினமான இலக்குகளை அடைவதற்கான ஆர்வம்

8. மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்காக பொருள் மற்றும் சேவை உற்பத்தி செய்வது, விநியோகம் மற்றும் தொடர்பான சகல நடவடிக்கைகளிலும் ஈடுபடும் நபர்,
   (1) முயற்சியாளர் (2) உரிமையாளர் (3) தொழிலதிபர் (4) முகாமையாளர்

9. X நிரலில் காட்டப்பட்டுள்ள எண்ணக்கருக்களை Y நிரலில் காட்டப்பட்டுள்ள பண்புகளுடன் தொடர்புபடுத்தினால் சரியான விடையானது,

| **X நிரல்** | **Y நிரல்** |
|---|---|
| தேவைகள் | A. உறுதியானவை |
| விருப்பங்கள் | B. அடிப்படையாக எழுகின்றவை |
| பொருட்கள் | C. உருவமற்றவை |
| சேவைகள் | D. தனிநபர்களுக்கேற்ப தீர்மானிக்கப்படுபவை |

   (1) B, A, C, D (2) B, C, A, D (3) B, D, C, A (4) B, D, A, C

10. கூற்றுக்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன,
   A - பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடல்
   B - ஆபத்துக்களை எதிர்கொள்ள விரும்பாமை
   C - கிடைக்கக்கூடிய வளங்களின் உச்சப்பயன் பெறப்படாமை
   D - உயிர் வாழ்வது பற்றிச் சிந்திப்பது
   மேற்காட்டப்பட்ட கூற்றுக்களுள் வணிகருக்கும் முயற்சியாளருக்கும் இடையிலான ஒற்றுமைகளாவன,
   (1) A மட்டும் (2) A, C, D மட்டும் (3) A, D மட்டும் (4) B, D மட்டும்

11. கஜன் சிற்றளவு வணிகராவார். அவரது வியாபாரத்தில் காணக்கூடிய பண்பானது,
   (1) வணிகத்தை நடாத்திச் செல்லும் போது தீர்மானம் எடுப்பதில் காணப்படும் சிரமம்
   (2) வணிக நடவடிக்கைகள் பல பகுதிகளில் பரவியுள்ளமை
   (3) அதிக ஊழியர்களைக் கொண்டிருத்தல்
   (4) சிறியளவு மூலதனத்துடன் ஆரம்பிக்கலாம்

12. சிற்றளவு வணிகங்களில் காணக்கூடிய பலமானது,
   (1) ஊழியர்களை இணைத்துக்கொள்ளல், பயிற்சியளித்தலில் சிரமம்
   (2) மாறும் சூழலுக்கேற்ப உடனடியாக பிரதிபலிப்பை வெளிப்படுத்துவதில் சிரமம்
   (3) சூழல் மாற்றங்களுக்கேற்ப எளிதில் மாறிக்கொள்ளும் திறன்
   (4) ஊழியர்கள் அதிக சலுகைகளை எதிர்பார்க்கின்றமை

13. சுரேஸ் தனது வணிகத்தில் இலக்கு மற்றும் நோக்கத்தை அடையத் தேவையான வளங்களை வழங்குதல், ஆபத்துக்களை எதிர்கொள்ளல் மற்றும் முக்கியமான தீர்மானங்களை எடுப்பதில் பணியாற்றுகின்றார். அவரின் பணியானது,

(1) முகாமையாளர் (2) தலைவர் (3) உரிமையாளர் (4) வணிகர்

14. முறையான நடைமுறையைப் பின்பற்றி சிறந்த ஊழியர்களை பணிக்கமர்த்தும் சிறந்த முயற்சியாளரின் திறனானது அழைக்கப்படுவது,

(1) எண்ணக்கருத் திறன் (2) தொழில்நுட்பத் திறன்
(3) ஆலோசனைத் திறன் (4) மானிடத் திறன்

15. கீழ்வருவனவற்றுள் நவீன வணிக சூழலின் பண்புகளை விபரிக்கும் விடை எது?

A - தேவை மற்றும் விருப்பம் சிக்கலானவை
B - நுகர்வோர் சக்திவாய்ந்தவர்கள்
C - இலாபம் பிரதான நோக்கமாகி விட்டது
D - மாற்றமடையும் வேகம் குறைந்துள்ளது

(1) A, B (2) A, B, C (3) A, B, C, D (4) A, C

16. வணிகத்தின் வெளியகச் சூழல் காரணிகளாக அமைவது,

(1) உரிமையாளர், முகாமையாளர், வழங்குநர்கள் மற்றும் வளங்கள்
(2) போட்டியாளர்கள் முகாமையாளர், வளங்கள் மற்றும் வழங்குநர்கள்
(3) உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்கள் மற்றும் வளங்கள்
(4) வாடிக்கையாளர்கள், வளங்கள், முகாமையாளர், போட்டியாளர்கள்

17. இலங்கை பொருளாதாரத்தில் முக்கிய வணிகத் துறைகளாவன,

(1) விவசாயம், மீன்பிடி மற்றும் சேவைகள்
(2) முதலாம் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை
(3) சிற்றளவு, நடுத்தர அளவு மற்றும் பாரியளவு
(4) உற்பத்தி, வியாபாரம் மற்றும் சேவைகள்

18. சர்வதேச சந்தையில் நுழைவதற்கான வாய்ப்பு அதிகம் என்பது எச்சூழலாகும்,

(1) வெளியகச் சூழலுக்கு (2) அரசியல் சூழலுக்கு
(3) பூகோளச் சூழலுக்கு (4) பொருளாதாரச் சூழலுக்கு

19. வெளியக சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதி எது?

(1) இயந்திரங்கள், விலைக் கழிவு, வேலை வாய்ப்பு
(2) வாடிக்கையாளர்கள், விலைக் கழிவு, அரச கொள்கைகள்
(3) காசு, சட்ட திட்டங்கள், வட்டி வீதங்கள்
(4) போட்டியாளர்கள், கட்டடங்கள், வட்டி வீதங்கள்

20. கீழே X நிரலில் காட்டப்பட்டுள்ள வணிகத்துக்கான இடத்தினை Y நிரலில் சரியாகக் காட்டும் ஒழுங்கு யாது?

| **X நிரல்** | **Y நிரல்** |
|---|---|
| இருப்பு களஞ்சியசாலை | A. வாகனம் நிறுத்தி வைப்பதற்கான போதுமான இடவசதி மற்றும் போக்குவரத்து வசதியுள்ள இடம் |
| துணிக்கடை | B. போக்குவரத்து வசதியுடன் கூடிய அமைதியான சூழலைக்கொண்ட அழகான இடம் |
| பாடசாலை உபகரணம் மற்றும் எழுதுகருவிகள் விற்குமிடம் | C. காட்சிக்கான இடவசதி போதுமான சனநெரிசலான இடம் |
| விழா மண்டபம் | D. பாடசாலைகளுக்கு அருகிலுள்ள சூழல் |

(1) A. B, C, D (2) A, C, B, D (3) A, C, D, B (4) C, A, D, B

21. செனேகஸ் என்ற இளைஞர் ஒரு முயற்சியாளர் என்பதுடன் அவர் கொழும்பு பிரதேசத்தில் கேபிள் கார் போக்குவரத்து சேவையை ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ளார். அவர் சந்தைக்குள் நுழைதல் இடம்பெறுவது,
   (1) தற்போதுள்ள பொருள் அல்லது சேவையை தற்போதுள்ள சந்தைக்கு அறிமுகப்படுத்தல்
   (2) தற்போதுள்ள பொருள் அல்லது சேவையை புதிய சந்தைக்கு அறிமுகப்படுத்தல்
   (3) புதிய பொருள் அல்லது சேவையை தற்போதுள்ள சந்தைக்கு அறிமுகப்படுத்தல்
   (4) புதிய பொருள் அல்லது சேவையை புதிய சந்தைக்கு அறிமுகப்படுத்தல்

22. கூற்றுக்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன,
   A - ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரத்தின் பாவனைக்காலம் 20 வருடங்களாகும்.
   B - ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரத்தை விற்பனை செய்ய முடியும்
   C - இலங்கை தர கட்டளைகள் பணியகத்தால் வழங்கப்படுகிறது
   D - உற்பத்தி செய்யப்படும் எந்தவொரு உற்பத்திக்கும் பெற்றுக்கொள்ள முடியும்
   மேற்காட்டப்பட்ட கூற்றுக்களில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரம் தொடர்பான சரியான கூற்றுக்களை உள்ளடக்கியுள்ள விடையானது,
   (1) A மற்றும் C   (2) B மற்றும் C   (3) A மற்றும் B   (4) C மற்றும் D

23. தேர்ந்தெடுக்கப்பட்ட வணிக எண்ணங்களின் ஆழமான ஆய்வு இடம்பெறுவது,
   (1) சூட்சுமமான பகுப்பாய்வின் போது   (2) முழுப் பகுப்பாய்வின் போது
   (3) SWOT பகுப்பாய்வின் போது   (4) சந்தைப் பகுப்பாய்வின் போது

24. வணிகத்தின் பெயர் தொடர்புடைய தொழில் துறைத்திட்டத்தைத் தயாரிக்கும் நோக்கம் மற்றும் குறிக்கோள் சுருக்கமாக உள்ளடக்கப்படும் வணிகத்திட்டத்தின் அடிப்படைக் கூறானது,
   (1) நிதித் திட்டம்   (2) நிர்வாகச் சுருக்கம்   (3) நிறுவனத் திட்டம்   (4) நிறைவேற்றுச் சுருக்கம்

25. வணிகத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் மூலம்,
   (1) கடந்த கால தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்படுகிறது
   (2) கடந்த கால மற்றும் தற்போதைய தகவல்கள் ஒப்பீடு செய்யப்படுகிறது
   (3) எதிர்காலத் தகவல்கள் முன்னுரைப்படுகிறது
   (4) தற்போதைய நிலைமையைப் பகுப்பாய்வு செய்கிறது

26. வணிகமொன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் வணிக நடவடிக்கைகளுக்குத் தேவையான பௌதிக மற்றும் மனித வளங்கள் அடையாளம் காணப்படுவது,
   (1) நிர்வாகத் திட்டத்தின் மூலம்   (2) வணிகத் திட்டத்தின் மூலம்
   (3) நிதித் திட்டத்தின் மூலம்   (4) உற்பத்தித் திட்டத்தின் மூலம்

27. புதிய வணிகமொன்றை ஆரம்பிக்கும் போது போட்டியாளர் மற்றும் இலக்கு வாடிக்கையாளர் தொடர்பாக அறிந்துகொள்வதற்காகத் தயாரிக்கப்படுவது,
   (1) சந்தைப் பகுப்பாய்வு   (2) வழங்குநர் பகுப்பாய்வு
   (3) சந்தைப்படுத்தல் பகுப்பாய்வு   (4) விற்பனைப் பகுப்பாய்வு

28. வணிகமொன்றின் எதிர்பார்க்கப்பட்ட சரியான விற்பனை வருமானம் எந்த விடையின் மூலமாகக் கணக்கிடப்படுகிறது,
   (1) பொருள் அல்லது சேவை விற்பனை அலகுகள் X அலகொன்றின் விற்பனை விலை
   (2) பொருள் அல்லது சேவை எதிர்பார்க்கப்பட்ட விற்பனை அலகுகள் X அலகொன்றின் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை விலை
   (3) $\dfrac{\text{பொருள் அல்லது சேவை விற்பனை அலகுகளின் எண்ணிக்கை}}{\text{அலகொன்றின் விற்பனை விலை}}$
   (4) $\dfrac{\text{பொருள் அல்லது சேவை எதிர்பார்க்கப்பட்ட விற்பனை அலகுகளின் எண்ணிக்கை}}{\text{அலகொன்றின் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை விலை}}$

29. உற்பத்தியொன்றுக்காக் காணப்படும் கேள்வியில் பூர்த்தி செய்ய முடியாத நுகர்வோர் பகுதியினர் அழைக்கப்படுவது,
(1) எதிர்பார்க்கப்படும் கேள்வி என (2) மொத்த கேள்வி என
(3) சந்தைப் பங்கு என (4) சந்தை இடைவெளி என

30. உற்பத்திக் கிரயம் கணிப்பதில் கருத்திற் கொள்ளப்படும் கிரயங்களை மட்டும் சரியாக உள்ளடக்கி உள்ள தொகுதி எது?
(1) பொருள் கிரயம், நிதிக் கிரயம் மற்றும் சந்தைப்படுத்தல் கிரயம்
(2) பொருள் கிரயம், கூலிக் கிரயம் மற்றும் நிதிக்கிரயம்
(3) பொருள் கிரயம், கூலிக் கிரயம் மற்றும் ஏனைய கிரயம்
(4) பொருள் கிரயம், நிதிக்கிரயம் மற்றும் ஏனைய கிரயம்

31. சீமெந்துக்கல் உற்பத்தி வணிகத்தின் சீமெந்துக்கல் உற்பத்தி இயந்திரத்தின் பராமரிப்புச் செலவானது,
(1) நிர்வாகக் கிரயம் (2) ஏனைய கிரயம்
(3) நிதிக் கிரயம் (4) சந்தைப்படுத்தல் கிரயம்

32. வணிகமொன்றின் நிறுவனக் கட்டமைப்புக்கான பதவிகளுடன் தொடர்புடைய பணிகள், பொறுப்புக்கள் மற்றும் தகுதி என்பவற்றை உள்ளடக்கிய திட்டமானது,
(1) நிறைவேற்றுச் சுருக்கம் (2) நிறுவனத் திட்டம்
(3) நிர்வாகத் திட்டம் (4) சந்தைப்படுத்தல் திட்டம்

33. வணிக செயற்பாடுளை நாளாந்தம் கொண்டு நடாத்துவதற்காகத் தேவைப்படும் அடிப்படை நிதி அடையாளம் காணப்படுவது,
(1) முதலீட்டு நிதி என (2) முதலீட்டு மூலதனம் என
(3) மொத்த முதலீடு என (4) தொழிற்படு மூலதனம் என

34. நிமலன் சிரட்டைக்கரி உற்பத்தி வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக எதிர்பார்க்கின்றார். அந்த வணிக-த்தைப் பதிவு செய்வதற்காகத் தேவையான விசேட அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய இடமானது,
(1) இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையில்
(2) புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தில்
(3) பிரதேச செயலாளர் காரியாலயத்தில்
(4) இலங்கை தர கட்டளைகள் பணியகத்தில்

35. தனியுடமை / பங்குடமை வணிகத்தின் பெயர் பதிவுச் சான்றிதழை வழங்கும் அதிகாரி,
(1) கம்பனிப் பதிவாளர் நாயகம் (2) கிராம உத்தியோகத்தர்
(3) மாகாண சபைச் செயலாளர் (4) பிரதேச செயலாளர்

36. கம்பனியின் நோக்கம், பங்குதாரர்களின் கடமைகள் மற்றும் உரிமைகள் ஆகிய தகவல்களை உள்ளடக்கிய ஆவணமானது,
(1) இணைப்புச் சான்றிதழ் (2) வர்த்தகச் சான்றிதழ்
(3) கம்பனி அகவிதிப் பத்திரம் (4) கூட்டிணைப்புச் சான்றிதழ்

37. பங்குடமை வியாபாரத்தின் வணிகப் பெயரைப் பதிவு செய்ய வேண்டியது,
(1) 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் கீழ்
(2) 1840 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க மோசடி தவிர்ப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ்
(3) 1918 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வணிக பெயர் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ்
(4) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ்

38. பங்குடமை ஒப்பந்தம் என்பது,
   (1) பங்குடமை வணிகம் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணமாகும்.
   (2) பங்குடமை வணிகத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை உள்ளடக்கிய ஆவணம்
   (3) பங்காளருக்கிடையில் இலாபநட்டத்தைப் பகிர்வதுடன் தொடர்புடைய ஆவணம்
   (4) பங்காளரின் உரிமையை வெளிப்படுத்தும் ஆவணம்

39. முயற்சியாண்மை கலாசாரம் தோன்றுவதற்கான காரணியாவது,
   (1) பழமையான சிந்தனைப் போக்கு
   (2) குறுங்காலத்தில் அரச கொள்கைகளிலான மாற்றங்கள்
   (3) சம்பளம் பெறும் தொழில் வாய்ப்புக்களை அதிகளவில் விரும்புதல்
   (4) நிலையான பொருளாதார சூழல் காணப்படுகின்றமை

40. வணிக நெறிமுறையைத் தீர்மானிக்கும் நிகழ்வில் தாக்கம் செலுத்தும் தரப்பினரை மட்டும் சரியாக உள்ளடக்கியுள்ள விடை எது?
   (1) முயற்சியாளர், ஊழியர், அரசு
   (2) முயற்சியாளர், நிறுவன உறுப்பினர்கள், வெளியகக் கட்சியினர்
   (3) முயற்சியாளர், முகாமையாளர், அரசு
   (4) முயற்சியாளர், அரசு, வெளியகக் கட்சியினர்

**(40 X 1=40 புள்ளிகள்)**

## முயற்சியாண்மைக்கல்வி II

* **முதலாம் ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1. பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

கட்டட நிர்மாண வணிகத்துறையில் நன்மதிப்பைப் பெற்ற சகிலனின் மகனான லலீசன் வணிக முகாமைத்துவ பட்டதாரியாவார். சிறுவயதிலிருந்தே புத்தாக்க சிந்தனையுடைய பிள்ளையாக இருந்ததால் எதிர்காலத்தில் வெற்றிகரமான முயற்சியாளராகுவதற்கான வலுவான ஆசை, அர்ப்பணிப்பு மற்றும் தன்னம்பிக்கையும் அவருக்கு இருந்தது.

இருப்பினும் லலீசனின் தந்தை சிறந்த வணிக அனுபவத்தைக் கொண்டிருந்தாலும், திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் எழுதப்பட்ட தகவல்களைப் பேணுவதிலும் மிகுந்த தயக்கம் காட்டினார். தந்தையின் வேண்டுகோளுக்கிணங்க நடைபாதைக் கற்களை உற்பத்தி செய்யும் ''லலீசன் என்டபிரைசஸ்'' நிறுவனத்தின் உரிமை லலீசனுக்கு மாற்றப்பட்டது. வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் லலீசன் வணிகம் சூழல் தொடர்பான பகுப்பாய்வினை மேற்கொண்டதுடன் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தமது வணிகத்தினை வ/ப தனியார் கம்பனியாக மாற்றுவதற்குத் தீர்மானித்தார்.

(i) ஒரு முயற்சியாளனான லலீசனிடம் காணக்கூடிய முயற்சியாளருக்கான பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) லலீசன் என்டபிரைசஸ் வணிகத்தின் பலம் மற்றும் பலவீனம் **ஒவ்வொன்றைக்** குறிப்பிடுக.

(iii) லலீசன் பகுப்பாய்வு செய்த வணிகச்சூழல் என்பதை வரையறுக்க.

(iv) லலீசன் என்டபிரைசஸ் என்ற வணிகத்தை ஒரு தனியார் கம்பனியாகப் பதிவு செய்வதற்குத் தேவையான **இரண்டு** ஆவணங்களைக் குறிப்பிடுக.

(v) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக மாற்றுவதால் லலீசனால் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கு** குறிப்பிடுக.

வணிகத்தின் அடுத்த மாதத்துக்கான பாதிடப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன,

| **விற்பனை வருமானம்** | **ரூ.** |
|---|---|
| காசுக்கு விற்பனை | 500 000 |
| கடனுக்கு விற்பனை | 300 000 |
| **செலவுகள்** | |
| பொருள் கிரயம் | 240 000 |
| கூலிக் கிரயம் | 90 000 |
| ஏனைய கிரயங்கள் | 110 000 |
| நிர்வாக செலவுகள் | 60 000 |
| வங்கிக்கடன் | 200 000 |
| நிதிச் செலவுகள் | 60 000 |
| புதிய இயந்திரக் கொள்வனவு | 300 000 |

மேற்காட்டப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய லலீசன் வணிகத்தின்,

(vi) உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடுக.

(vii) உற்பத்தி அல்லாக் கிரயங்களைக் கணிப்பிடுக.

(viii) மாதத்துள் 11 000 நடைபாதைக் கற்கள் உற்பத்தி செய்யப்பட்டதாயின் அலகொன்றின் உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடுக.

(ix) வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதியைக் காட்டுக.

(x) தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டத்தைக் கணிப்பிடுக.

**(2 X 10 = 20 புள்ளிகள்)**

**2.** (i) உற்பத்திக் காரணிகளுள் முயற்சியாண்மையானது மிகவும் தனித்துவமானது ஏன் என்பதை சுருக்கமாக விளக்குக.

(ii) முயற்சியாளரொருவர் தனது ஆக்கத்திறனை வளர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் **நான்கு** குறிப்பிடுக.

(iii) புத்துருவாக்கத்திற்கு அடிப்படையாக அமையும் மூலாதாரங்கள் **நான்கினை** எழுதுக.

(iv) பொருட்கள் மற்றும் சேவைகளுக்கிடையிலான வேறுபாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(v) முயற்சியாண்மையின் **இரண்டு** வகைகளைக் குறிப்பிட்டு ஒவ்வொரு வகைக்கும் **ஒவ்வோர்** உதாரணம் குறிப்பிடுக.

**(2 X 5 = 10 புள்ளிகள்)**

**3.** (i) சிறு வணிகங்களுடன் தொடர்புடைய **நான்கு** வரையறைகளைக் குறிப்பிடுக.

(ii) சிற்றளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கு ஏதுவான காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iii) முகாமைத்துவ வகிபாகத்தில் ஒரு முயற்சியாளர் மேற்கொள்ளும் **இரண்டு** செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

(iv) சூழல் முக்கியத்துவம் தொடர்பாக அக்கறை செலுத்த வேண்டியதன் முக்கியம் தொடர்பாக **நான்கு** காரணிகளை அடையாளம் காண்க.

(v) வேகமாக மாறிவரும் வணிகச் சூழலில் காணக்கூடிய **நான்கு** போக்குகளைக் குறிப்பிடுக.

**(2 X 5 = 10 புள்ளிகள்)**

**4.** (i) வணிகச் சூழலைக் கற்றுக்கொள்வதன் மூலம் முயற்சியாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(ii) சகிலன் ஒரு வணிகத்தைத் தொடங்கி நடாத்த விரும்புகின்றார். அவர் கவனம் செலுத்த வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

(iii) ஒரு புதிய முயற்சியாளர் மூலதனத்தைத் திரட்டிக் கொள்ளக்கூடிய **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக.

(iv) ஒரு முயற்சியாளருக்கு வணிக எண்ணங்கள் உருவாகக்கூடிய **நான்கு** ஆதாரங்களைக் குறிப்பிடுக.

(v) ஒரு திறமையான முயற்சியாளர் புதுமைகளை அறிமுகப்படுத்தக்கூடிய **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக.

**(2 X 5 = 10 புள்ளிகள்)**

**5.** (i) ஒரு நிர்வாகத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் **இரண்டு** எழுதுக.

(ii) வணிகமொன்றைத் தொடங்குவதற்கு முன்னர் ஏற்படும் செலவுகள் **இரண்டு** குறிப்பிடுக.

(iii) பங்குடமை ஒப்பந்தமொன்றில் உள்ளடக்கக்கூடிய சரத்துக்கள் **நான்கு** குறிப்பிடுக.

(iv) அங்கீகார வணிக அமைப்பில் காணக்கூடிய பண்புகள் **இரண்டு** குறிப்பிடுக.

(v) அங்கீகார வணிக முறை மூலமாக அங்கிகாரத்தைப் பெறுபவர் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **இரண்டு** குறிப்பிடுக.

**(2 X 5 = 10 புள்ளிகள்)**

**6.** (i) முயற்சியாண்மைக்கு எதிரான சமூகம் சார்பான காரணிகள் **நான்கு** குறிப்பிடுக.

(ii) பெண் முயற்சியாளர்களாக உருவாகுவதற்கான **நான்கு** பலங்களைக் குறிப்பிடுக.

(iii) வணிக ஒழுக்கம் என அழைக்கப்படுவது என்ன?

(iv) சமூகப் பொறுப்பைக் கடைப்பிடிப்பதன் மூலம் வணிகத்துக்குக் கிடைக்கும் நன்மைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(v) முயற்சியாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதி அல்லாத ஊக்குவிப்புக்களுக்கு **இரண்டு** உதாரணம் குறிப்பிடுக.

**(2 X 5 = 10 புள்ளிகள்)**

**7.** (i) நிதித்திட்டத்தில் உள்ளடங்கும் பகுதிகள் **இரண்டு** எழுதுக. **(02 புள்ளிகள்)**

(ii) நிதித்திட்டத்தினால் முயற்சியாளருக்குக் கிடைக்கும் நன்மைகள் **இரண்டு** குறிப்பிடுக.

**(02 புள்ளிகள்)**

(iii) விஷாலியின் முன்மொழியப்பட்ட துணி உற்பத்தி வணிகத்துக்கான தயாரிக்கப்பட்ட திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| **உருப்படிகள்** | **ரூ.** |
|---|---|
| விஷாலினால் கொண்டுவரப்பட்ட காசு | 600 000 |
| வங்கிக்கடன் பெற்றது | 500 000 |
| கட்டட வாடகை செலுத்தியது | 10 000 |
| மின்சாரப் பட்டியல் செலுத்தியது | 5 000 |
| கடனுக்கு விற்பனை | 50 000 |
| காசுக்கு விற்பனை | 150 000 |
| தையல் இயந்திரக் கொள்வனவு | 200 000 |
| மூலப்பொருள் கொள்வனவு | 80 000 |
| கடன்பட்டோரிடம் காசு பெற்றது | 25 000 |
| ஊழியர் சம்பளம் செலுத்தியது | 25 000 |

மேற்காட்டப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி வணிகத்தின் பாதிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரித்து காசுமீதியைக் கணிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

* * *

## புள்ளி வழங்கும் திட்டம் - முயற்சியாண்மைக்கல்வி

### பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. (3) | 2. (2) | 3. (1) | 4. (3) | 5. (4) | | | |
| 6. (2) | 7. (4) | 8. (3) | 9. (4) | 10. (3) | 11. (4) | 12. (3) | |
| 13. (3) | 14. (2) | 15. (1) | 16. (3) | 17. (2) | 18. (3) | 19. (2) | 20. (3) |
| 21. (2) | 22. (3) | 23. (2) | 24. (4) | 25. (3) | 26. (2) | 27. (1) | 28. (2) |
| 29. (4) | 30. (3) | 31. (2) | 32. (3) | 33. (4) | 34. (1) | 35. (4) | 36. (3) |
| 37. (3) | 38. (2) | 39. (4) | 40. (2) | | | | |

### பகுதி - II

**1.** (i)
- ஆக்கத்திறன்
- புத்துருவாக்கம்
- நட்ட இடர்களைப் பொறுப்பேற்றல்
- எதிர்காலத் தூர நோக்கு
- நேர் சிந்தனை
- சுதந்திரத் தன்மை
- நெகிழும் தன்மை
- அதிகூடிய ஆசை
- சூழல் மீதான உணர்வும் வாய்ப்புக்களை இனங்காணலும்
- வெற்றியானது சுயமான திறனில் தங்கியுள்ளது என்ற நம்பிக்கையைக் கொண்டிருத்தல்
- கடினமான நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதிருள்ள விருப்பம் **(01 X 2 = 02 புள்ளிகள்)**

(ii) **பலம்**
- தந்தையின் நிதி வசதி
- தந்தையின் நற்பெயர்
- வணிக முகாமைத்துவப் பட்டதாரி **(01 X 1 = 01 புள்ளி)**

**பலவீனம்**
- லலீசனின் தந்தை எவ்வித திட்டமும் இன்றி வணிகத்தை நடாத்தியமை
- லலீசனின் தந்தை வணகத் தகவல்களை எழுத்து மூலம் பேணாமை **(01 X 1 = 01 புள்ளி)**

(iii) வணிகச் சூழல் என்பது வணிக செயற்பாடுகளின் போது நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகள் மற்றும் சக்திகளாகும். **(02 புள்ளிகள்)**

(iv)
- விண்ணப்பப்படிவம்
- கம்பனியின் பெயர் தொடர்பான விபரம்
- கம்பனியின் அகவிதிப் பத்திரம்
- கம்பனியின் இணக்குனராகச் செயலாற்றுவதற்கான அவ்வவ் இயக்குனர்களிடமிருந்து பெறப்பட்ட சம்மதக் கடிதம்
- கம்பனியின் செயலாளராகச் செயலாற்றுவதற்கான செயலாளரின் சம்மதக்கடிதம்

**(01 X 2 = 02 புள்ளிகள்)**

(v)
- ஒருவரினால் ஆரம்பிக்கக்கூடியது
- பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்
- சட்ட ஆளுமை காணப்படுதல்
- தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படுதல்
- முறையானதும் அதிக வரவேற்பைப் பெற்றதுமாக இருத்தல்
- குடும்ப அங்கத்தவர், உறவினர், நண்பர்களை இணைத்து கம்பனியை ஆரம்பிக்கக்கூடியதாக இருத்தல்

**(½ X 4 = 02 புள்ளிகள்)**

(vi) **உற்பத்திக் கிரயம்**

| | ரூ. | |
|---|---|---|
| பொருள் கிரயம் | 240 000 | 01 |
| கூலிக்கிரயம் | 90 000 | 01 |
| ஏனைய கிரயங்கள் | 110 000 | |
| **உற்பத்திக் கிரயம்** | **440 000** | (02) |

செலவு வகைகள் **3** சரியாயின் **02** புள்ளிகள்
செலவு வகைகள் **2** சரியாயின் **01** புள்ளி

**(02 புள்ளிகள்)**

(vii) **உற்பத்தி அல்லாக் கிரயங்கள்**

| | ரூ. | |
|---|---|---|
| நிர்வாக செலவுகள் | 60 000 | 01 |
| நிதிச் செலவுகள் | 60 000 | 01 |
| உற்பத்தி அல்லாக் கிரயங்கள் | 120 000 | (02) |

**(02 புள்ளிகள்)**

(viii) **அலகொன்றின் உற்பத்திக் கிரயம்**

$$\text{அலகொன்றின் உற்பத்திக் கிரயம்} = \frac{\text{மொத்த உற்பத்திக் கிரயம்}}{\text{உற்பத்தி அலகுகள்}}$$

$$= \frac{440\,000 \ [01]}{11\,000 \ [01]}$$

= **ரூ. 40** (02)

**(02 புள்ளிகள்)**

(ix) **நடைமுறையல்லாச் சொத்துக்கள்**

இயந்திரம் 300 000 (02)

**(02 புள்ளிகள்)**

(x) இலாப நட்டம்

| | | |
|---|---|---|
| **வருமானம்** | | |
| காசுக்கு விற்பனை | 500 000 | |
| கடனுக்கு விற்பனை | 300 000 | 800 000 |
| **செலவுகள்** | | |
| பொருள் கிரயம் | 240 000 | |
| கூலிக் கிரயம் | 90 000 | |
| ஏனைய செலவுகள் | 110 000 | |
| நிர்வாக செலவுகள் | 60 000 | |
| நிதிச் செலவுகள் | 60 000 | (560 000) |
| **தேறிய இலாபம்** | | **240 000** (02) |

இரண்டு விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் கூடியது 1½ புள்ளிகள்

**(02 புள்ளிகள்)**

| Q1 | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 20 |

**2.** (i) நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய உற்பத்திக் காரணிகளை ஒன்றிணைத்து பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கு முயற்சியாழ்மை என்ற உற்பத்திக் காரணியானது முக்கியம் வாய்ந்ததாகும். **(02 புள்ளிகள்)**

(ii)
- பல்லினத் தன்மையினை உருவாக்கிக் கொள்ளல்
- தோல்வியைச் சகித்துக் கொள்ளல்
- ஆர்வத்தை ஊக்குவித்தல்
- பிரச்சினைகளைச் சவாலாகக் காணுதல்
- ஆக்கத்திறன் பயிற்சிக்கான சந்தர்ப்பம்
- ஆக்கத்திறனை மதித்தல்
- ஆக்கத்திறனான நடத்தைகளைப் பின்பற்றுதல் **(½ X 4 = 02 புள்ளிகள்)**

(iii)
- எதிர்பாராத நிகழ்வுகள்
- செயலொழுங்கின் தேவைப்பாடு
- சந்தையில் ஏற்படும் மாற்றங்கள்
- மக்கள் சூழலிலும் வாழ்க்கையிலும் ஏற்படும் மாற்றங்கள்
- மனப்பாங்கு, விளங்கும் முறைகளில் ஏற்படும் மாற்றங்கள்
- அறிவை மையமாகக் கொண்ட எண்ணக்கரு **(½ X 4 = 02 புள்ளிகள்)**

(iv)

| பொருட்கள் | சேவைகள் |
|---|---|
| • உருவமுடையவை / பௌதிக தன்மையானவை | உருவமற்றவை / பௌதிக தன்மையற்றவை |
| • களஞ்சியப்படுத்த முடியும் | களஞ்சியப்படுத்த முடியாது |
| • வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியும் | வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியாது |
| • ஒத்த தன்மையானவை | ஒத்த தன்மையற்றவை |
| • உற்பத்தி செயன்முறை காணப்படும் | உற்பத்திச் செயன்முறை காணப்படமாட்டாது |

**(01 x 2 = 02 புள்ளிகள்)**

(v)

| | |
|---|---|
| வணிக முயற்சியாளர் | சில்லறை வியாபாரி |
| சமூக முயற்சியாளர் | மகாத்மா காந்தி, மேரி கியூரி, CWW கன்னங்கர, பேராசிரியர் முகமது யூனுஸ் |
| உள்ளக / நிறுவன முயற்சியாளர் | தரமான விருதுகளை வென்ற அரச நிறுவனத் தலைவர்கள், உற்பத்தித்திறன் விருதுகளை வென்ற பாடசாலைத் தலைவர்கள் |

ஒரு சரியான முயற்சியாளர் ½ புள்ளி அதற்குப் பொருத்தமான உதாரணம் ½ புள்ளி

**(02 புள்ளிகள்)**

| Q2 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2 | 2 | 2 | 2 | 2 | 10 |

**3.** (i)
- வணிகத்துக்கான மூலதனத்தைத் திரட்டும் வழிகள் வரையறுக்கப்பட்டவை
- நவீன தொழில் நுட்பப் பயன்பாடு இல்லை
- வரையறுக்கப்பட்ட சந்தை வாய்ப்பு
- வணிக செயற்பாடுகளில் குடும்ப அங்கத்வர்களின் தலையீடுகள் அதிகம்
- வணிக உரிமையாளரின் வணிக அனுபவம் மற்றும் அறிவு மட்டுப்படுத்தப்பட்டுக் காணப்படல்

**(½ x 4 = 02 புள்ளிகள்)**

(ii) • வணிகத்தின் நிதி முகாமைத்துவ செயற்பாட்டில் பலவீனமான நிலை
• போட்டிகளுக்கு முகங்கொடுப்பதில் சிரமத் தன்மை
• வணிக செயற்பாடுகள் வணிகத்திட்டமின்றி மேற்கொள்ளப்படும் நிலைமை
• பல வணிகர்கள் தங்களை முயற்சியாளர்களாக கருதாத நிலைமை
• வணிகத்தில் காணப்படும் வளங்களை சரியாக நிர்வகிக்காத நிலைமை
• வணிக செயற்பாடுகளில் போதிய அனுபவம் இல்லாமை
• மோசமான மனித உறவுகள் **(½ x 4 = 02 புள்ளிகள்)**

(iii) • வணிகத்திட்டங்களைத் தயாரித்தல்
• திட்டத்துக்கமைய செயற்பாடுகள் இடம்பெறுகின்றதா என்பதை சரிபார்த்தல்

**(01 x 2 = 01 புள்ளிகள்)**

(iv) • புதிய வருமான மூலங்களை இனங்காணும் திறனை அதிகரிக்க.
• சந்தைப் போட்டிகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க.
• சூழலில் இதுவரை பாவிக்கப்படாத வளங்களைப் பணன்படுத்துதல்.
• வணிக வாய்ப்புக்களை வெற்றிகரமாக இனங்காண்பதற்கு
• சூழல் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்கு
• சூழலில் காணப்படும் வளங்களைப் பாதுகாத்தல், எதிர்காலத்துக்காகச் சேமித்தல்.

**(½ x 4 = 02 புள்ளிகள்)**

(v) • உலகமயமாதல்
• சூழலுக்கேற்ற எரிபொருள் உற்பத்தி
• புதிய தொழில்நுட்பம் மற்றும் உபரண பயன்பாடு
• ஆரோக்கியமான உணவு உற்பத்தி
• பதப்படுத்தப்பட்ட உணவுகளுக்கான தேவை அதிகரிப்பு

போன்ற பொருத்தமான விடைகள் **(½ x 4 = 02 புள்ளிகள்)**

| **Q3** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **2** | **2** | **2** | **2** | **2** | **10** |

**4.** (i) • வணிகத்துக்கான பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காணுதல்
• சூழலில் காணப்படும் பல்வேறு வணிக வாய்ப்புக்களை அடையாளம் காணுதல்
• வணிகம் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களை அடையாளம் காணுதல்
• சூழல் மாற்றங்களுக்கு பொருத்தமான வகையில் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலை நடைமுறைப் படுத்தல்.
• சூழல் மாற்றங்களுக்கேற்ப திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகத் தீர்மானம் எடுத்தல்

**(½ x 4 = 02 புள்ளிகள்)**

(ii) • வணிகத்திற்காக எவ்வளவு அர்டப்பணிப்புடன் இருக்க முடியும்
• இலக்கு வாடிக்கையாளர் யார்?
• மூலதனத்தை எவ்வாறு திரட்டுவது?
• வணிகம் எந்தப் பொருள் அல்லது சேவையை அடிப்படையாகக் கொண்டது?
• வருமானம் போதுமானதாக உள்ளதா? **(½ x 4 = 02 புள்ளிகள்)**

(iii)
- சொந்த சேமிப்பு
- சொந்த சொத்துக்களை முதலீடு செய்தல் அல்லது விற்றல்
- உறவினர்கள் அல்லது நண்பர்களிடம் பெற்றுக் கொள்ளல்
- வங்கிக்கடன் மற்றும் குத்தகை
- வாடிக்கையாளர்களிடம் முற்பணங்களைப் பெறல் **(½ x 4 = 02 புள்ளிகள்)**

(iv)
- பொழுதுபோக்குகள் மற்றும் ஆர்வங்களின் மூலம்
- தனிப்பட்ட திறன்கள் மற்றும் அனுபவம் மூலம்
- சந்தை ஆய்வுகள் மூலம்
- வாடிக்கையாளர் கருத்துக்களின் மூலம்
- ஆக்கத்திறனான சிந்தனை மூலம்
- வெகுஜன ஊடகங்கள் மூலம்
- வழங்குநர்கள் பொருத்தமான கருத்துக்கள் மூலமாக **(½ x 4 = 02 புள்ளிகள்)**

(v) வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்குப் பொருத்தமான வகையில் வேறுபாடான தயாரிப்புக்கள் ஊடாக மாற்றங்களை மேற்கொள்வதாகும்.
உதாரணமாக : பால் மாவைச் சந்தையில் வழங்கும் போது
ஜம்போ பக் (Jambo pack)
பட்ஜெட் பக் (Budget pack)
பொருளாதார பக் (Economy pack)
சாசெட் பக் (Sachet pack) **(½ x 4 = 02 புள்ளிகள்)**

| Q4 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2 | 2 | 2 | 2 | 2 | 10 |

**5.** (i)
- நிர்வாக பதவிகள் மற்றும் செயற்பாடுகள்
- ஊழியர் சம்பளம் மற்றும் கூலிகள்
- ஏனைய நிர்வாக செலவுகள்
- நிர்வாக நிலையான சொத்துக்கள் **(01 x 2 = 02 புள்ளிகள்)**

(ii)
- சந்தைப் பகுப்பாய்வு செலவுகள்
- அமைவிட அபிவிருத்திக்கான செலவுகள்
- மூலப்பொருள் மற்றும் உபகரணங்களைத் தேடிப்பார்ப்பதற்கான செலவுகள்
- பதிவு செய்வதற்கான செலவுகள்
- ஏனைய செலவுகள்

பொருத்தமான வேறு விடைகள் **(01 x 2 = 02 புள்ளிகள்)**

(iii)
- பங்காளர் மூலதனம் பங்களிக்கும் முறை
- பங்காளர் இலாப நட்டம் பகிரும் முறை
- பங்காளர் வணிக செயற்பாடுகளில் பங்களிக்கும் முறை
- பங்காளர் சம்பளம் வழங்கும் முறை
- பங்காளர் கடமைகள் மற்றும் உரிமைகள்
- பங்குடமை வணிகத்தின் செயற்பாடுகளை முடிவுறுத்தும் தகவல்கள் **(½ x 4 = 02 புள்ளிகள்)**

(iv)
- அங்கீகாரம் அளிப்பவர் மற்றும் அங்கீகாரம் பெறுபவர் ஆகிய இரு தரப்பினரதும் ஈடுபாடு
- அங்கீகாரம் அளிப்பவர் மற்றும் அங்கீகாரம் பெறுபவர் ஆகிய இருவருக்குமிடையில் ஒப்பந்தமொன்று காணப்படும்
- அங்கீகாரம் பெற்றவரால் அங்கீகாரம் அளிப்பவருக்கு கொடுப்பனவு செய்யபப்டும்

**(01 x 2 = 02 புள்ளிகள்)**

(v)
- அங்கீகாரம் அளிப்பவரின் நன்மதிப்பினால் அங்கீகாரம் பெற்றவருக்கு இலாபம் உழைப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும்.
- அங்கீகாரம் அளிப்பவரின் நன்மதிப்பினால் அங்கீகாரம் பெற்றவருக்கு பிரபலமான சந்தையினுள் பிரவேசிக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.
- அங்கீகாரம் அளிப்பவரால் அங்கீகாரம் பெற்றவருக்கு முகாமைத்துவப் பயிற்சி வழங்கப்படும்.

**(01x 2 = 02 புள்ளிகள்)**

| Q5 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2 | 2 | 2 | 2 | 2 | 10 |

**6.** (i)
- ஊதியம் பெறும் வேலையை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு அதிகம்
- வருமானம் மற்றும் ஆபத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயக்கம்
- கல்வி மூலமாக ஊக்கப்படுத்தல் இடம்பெறாமை
- அரசின் மூலமான ஊக்கப்படுத்தல்கள் போதாமை
- சார்பு மனநிலையைக் கொண்டிருப்பது **(½ x 4 = 02 புள்ளிகள்)**

(ii)
- பெண்களுக்கு உள்ளார்ந்த திறன்களை உருவாக்கிக் கொள்ள முடியுமான நிலைமை
- சுய ஒழுக்கம் நடைமுறைப்படுத்தல்
- சரியான நேர முகாமைத்துவம்
- உயர் மட்டத்திலான புத்தாக்கத்தைக் கொண்டிருத்தல்
- தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் வணிக செயற்பாடுகளைச் சமநிலையில் முகாமைத்துவம் செய்யும் ஆற்றல்
- சிக்கனத்தைக் கையாளும் திறன் **(½ x 4 = 02 புள்ளிகள்)**

(iii) வணிக ஒழுக்கம் என்பது எவரேனும் தனிநபர் எது சரியானது? எது பிழையானது? இல்லாவிடின் எது நன்மையானது? எது தீமையானது என்பவை தொடர்பாக எழுத்து, சொல் அல்லது செயல் மூலமாக ஏற்படுத்திக்கொள்கின்ற பொது உடன்படிக்கையாகும். **(02 புள்ளிகள்)**

(iv)
- வணிகத்தின் நன்மதிப்பினை விருத்தி செய்வது
- வணிகத்தினை நீண்டகாலம் நடாத்திச் செல்ல முடியும்
- ஏற்படக்கூடிய சட்ட சிக்கல்களைக் குறைத்துக் கொள்ளலாம்
- வணிகத்தின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்வி அதிகரிப்பதனூடாக அதிக இலாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம்
- வேலையாட்களின் மன உறுதி அதிகரித்தல் மற்றும் வணிகத்திலான ஆர்வம் அதிகரித்தல்

**(½ x 4 = 02 புள்ளிகள்)**

(v) ஒரு வணிகத்திற்குக் கிடைக்கும் பணவடிவில் அல்லாத நன்மைகள் நிதி அல்லாத ஊக்குவிப்புக்கள் எனப்படும்.

உ+ம் :
- முயற்சியாளருக்கான பயிற்சி
- ஊழியர்களுக்கான பயிற்சிகள்
- சந்தைப்படுத்தல் பயிற்சி
- வணிகத்திட்டம் தயாரிப்பு ஆலோசனை
- தொழில்நுட்பப் பயிற்சி
- சந்தையைக் கண்டறிதல் உபாயங்கள் **(01x 2 = 02 புள்ளிகள்)**

| **Q6** | | | | | |
|---|---|---|---|---|---|
| | **2** | **2** | **2** | **2** | **2** | **10** |

**7.** (i)
- வணிகத்தைக் தொடங்குவதற்கு முன்னரான செயற்பாடுகள் மற்றும் செலவுகள்
- மொத்த முதலீடு மதிப்பீடு
- எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சல் அறிக்கை
- வணிகத்தின் பிரதிலாப கணிப்பு **(01x 2 = 02 புள்ளிகள்)**

(ii)
- வணிகத்துக்குத் தேவையான நிதி அளவைத் தீர்மானிக்க
- நிதிப் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்கு
- குறிப்பிட்ட காலப்பகுதியின் முடிவில் வணிகத்துக்குக் கிடைக்கும் பிரதிபயன்கள், இலாபங்களை அறிய
- கிடைக்கும் பிரதிபயன்கள் போதுமானதா என்பதை மதிப்பிடுவதற்கு **(01x 2 = 02 புள்ளிகள்)**

(iii) **விஷால் வணிகத்தின் காசுப்பாய்ச்சல்கூற்று** (½)

| | | |
|---|---|---|
| **காசு உட்பாய்ச்சல்கள்** | | |
| விஷால் கொண்டு வந்த காசு | 600 000 (½) | |
| வங்கிக்கடன் பெற்றது | 500 000 (½) | |
| காசுக்கு விற்பனை | 150 000 (½) | |
| கடன்பட்டோரிடம் பெற்ற காசு | 25 000 (½) | 1 275 000 |
| **காசு வெளிப்பாய்ச்சல்கள்** | | |
| வாடகை செலுத்தியது | 10 000 (½) | |
| மின்சாரம் செலுத்தியது | 5 000 (½) | |
| தையல் இயந்திர கொள்வனவு | 200 000 (½) | |
| மூலப்பொருள் கொள்வனவு | 80 000 (½) | |
| சம்பளம் செலுத்தியது | 25 000 (½) | (320 000) |
| **காசு மீதி** | (01) | 955 000 |

**(06 புள்ளிகள்)**

| **Q7** | | | | |
|---|---|---|---|---|
| | **2** | **2** | **6** | **10** |